Registered No. M-4483

Madras War Review (TAMIL) 2-6-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV

1944-ம் ௵ ஜூன் ௴ 2௳, வெள்ளிக்கிழமை

இதழ் 39

மன்னர்பிரான் பாராட்டு

இந்தப் போராட்டம் மகா கஷ்டமான தென்றும் கடுமையான தென்றும் நம் அனைவருக்கும் தெரியும். அங்கே தலை சிறந்த வெற்றி பெற்று வரும் ஜெனரல் அலெக்சாந்தருக்கும் அவருடைய கட்டளைக் குட்பட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தயவு செய்து தெரிவிக்கவும். இத்தாலியிலுள்ள எதிரிப் படைக ளெல்லாம் முடிவாக ஒழிகிற வரையிலும் தொடர்ச்சியாக வெற்றிகள் பெற வேண்டு மென்று வேண்டுகிறேன்

மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் மத்தியதரைக் கடல்
பகுதியிலுள்ள படைகளின் மகா தலைவரான
ஜெனரல் மெய்ட்லன்ட் வில்சனுக்கு சென்ற
சனிக்கிழமை விடுத்த செய்தி

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : மன்னர் பிரான்	1	நாசக்கார ஜப்பான்	5
மன்னர்பிரான் பாராட்டு	1	சிறு கதை : வீரச்சுவை	6
முரசொலி	2	பிரிட்டிஷாரின் தீரம்	7
விளம்பரம் : எஸ். எஸ். எஸ்.	2	சும்மா தூங்குவார்களா ?	10
தலையங்கம் : போர் நிலை	3	சென்னையில் மட்டும் 3 கோடிக்கும் அதிகமா ?	12
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நாட் குறிப்புக்கள்	12
வானொலி நாட் குறிப்புக்கள்	4		

முரசொலி

"ரோமாபுரியின் தலைவாசலில் இப்போது நாம் நிற்கிறோம். சில நாட்களிலேயே, நாஜி கொடுமையினின்று இந்த முதலாவது ஐரோப்பிய தலை நகரத்தை விடுவிப்போம். இனி நேச நாடுகளுக்குக் கிடைக்கப் போகும் பல வெற்றிகளுக்கும் முதல் வெற்றியாக விளங்குவது நமது 5-ம் படையினர் அடைந்த வெற்றி. சுயேச்சையும் விடுதலையும் தான் தம் உயிர் என்று போற்றுகிறவர்கள் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து, இத்தாலியில் போராடும் இந்தக் கோஷ்டியினராக அமைந்திருக்கிறார்கள்.

—ஜெனரல் மார்க் கிளார்க், 5-ம் படைத் தலைவர் நெட்டுனோவில் சென்ற திங்கட்கிழமை கூறியது.

"பிலிப்பைன் தீவுகளிலும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் உள்ள முக்கியமான பகுதிகளை நோக்கி முன்னேறுவதற்கு ஏற்ற தளங்கள் நமக்குக் கிடைத்து விட்டன. போர்த் தந்திர முறைப்படிப் பார்த்தால், நியூகினி போராட்டம் முடிந்துவிட்ட தென்று சொல்லலாம்."

"பதினொரு மாதங்களுக்கு முன்பு பசிபிக் போர் முனையில் நாம் தாக்கிப் போராட ஆரம்பித்த போது, நான் எதிர்பார்த்திருந்ததை விட, வெகு அதிகமாகவே பலன்கள் கிடைத்திருக்கின்றன. போராட்டம் வெகுவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. நமக்கு நேர்ந்த சொற்ப சேதம் பற்றி குறிப்பாக நான் நன்றி செலுத்துகிறேன். கடவுள் அருள் வழியே எல்லாம் நடை பெறும் என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டியதில்லை."

—ஜெனரல் மெக்கார்தர், தென் மேற்குப் பசிபிக் பிரதம படைத் தலைவர், சென்ற ஞாயிற்றுக்கிழமை கூறியது.

S. S. S.

இப்போதே நீங்கள் சேமித்து வைப்பீர்களானால்
உங்கள் பெண்ணின் திருமணத்திற்குத் தேவையான பணத்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட நேரிடாது

❋

நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளை வாங்குங்கள்

S. S. S.

உங்களிடம் பணமுள்ள இப்போதே நீங்கள் சேமித்து வைக்க வேண்டும்.
இல்லையானால், நீங்கள் ஒருபோதும் நல்வாழ்வு
வாழ முடியாது

❋

நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளை வாங்குங்கள்.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம௵ ஜூன்௴ 2௳, வெள்ளிக்கிழமை | இதழ் 39

போர் நிலை

பர்மியப் போராட்டத்தில் மூன்று கட்டங்கள் முக்கிய மானவை. 1. இம்பால், 2. கொஹிமா, 3. மியிட்கியானு. இம் மூன்று மட்டு மன்றி அரக்கான் போர் முனையும் முக்கிய மானது தான். இம்பாலும் கொஹிமாவும் அஸ்ஸாமிலுள்ள கேந்திர ஸ்தானங்கள். இவற்றைக் கைப்பற்றினால் ஜப்பானியர்கள் இந்தியாவை எளிதில் தாக்க இயலும். ஆகவே, இந்த இரண்டு ஊர்களையும் கைப்பற்றுவதற்கு ஜப்பானியப் படைகள் அரும் பாடு பட்டன. அவர்கள் முயற்சி பலிக்க வில்லை. அங்கிருந்து விரட்டி யடிக்கப்பட்டார்கள். என்றாலும் அவர்கள் தம் முயற்சியைக் கைவிடவில்லை. மேலும் மேலும் தாக்கிப் பார்க்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அவர்களுக்குத் தோல்வி தான். இந்த நிலைமையிலே மழை ஆரம்பமாகி விட்டது. தம் பாசறைகளை நேசப் படைகள் பத்திரப்படுத்திக் கொள்ள எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஜப்பானியர்களோ, அப்படியில்லை. அவர்களால் ஏற்பாடுகள் செய்து கொள்ள முடியாது. ஏன்? எலி வளைகளைப் போன்ற வளைகளை மலைகளில் தோண்டிக் கொண்டு அவற்றில் பதுங்கி யிருப்பவர்கள் தானே யவர்கள். மழை பெய்தால், அந்த வளைகளி லெல்லாம் தண்ணீர் நிறைந்து விடுமல்லவா? அப்போது தாமும் தம் தளவாடங்களும் தண்ணீரில் நனைந்து போகும்படி நேரும். எனவே தான், முழு மூச்சாகத் தாக்கிப் பார்க்கிறார்கள் இம்பாலையும் கொஹிமாவையும். அவர்கள் கை அங்கே ஓங்க முடியவில்லை.

நிற்க, சீனாவைச் சேர்ந்த யூனான் பிரதேசத்தி லிருந்து பர்மிய எல்லைப்புரத்தின் வழியாக சீனப் படைகள் முன்னேறின. இந்தப் படைகள் சீபாங் 'என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இந்த ஊர் பர்மா ரோட்டின் மேலுள்ளது. சால்வீன் ஆற்றின் மேல்புரம் உள்ளது. சால்வீன் ஆற்றிற்கு மேற்கே யுள்ள ஜப்பானியப் பாதுகாப்பு அரண் லுங்லிங் என்னு மிடத்திலிருக்கிறது. சியாங்கை சீனப் படைகள் கைப்பற்றி விட்டதனால் லுங்லிங்கி லிருந்து பின் வாங்கியோடும் ஜப்பானியப் படைகளுக்கு ஆபத்து நேரக் கூடும். இந்தச் சீனப் படைகள் லாஷியோவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கு அருகில் தான் மேஜர் ஜெனரல் லெண்டாய்க்னேயின் சிண்டிட் படைகள் தகுந்தபடி போராடிக் கொண்டிருக்கின்றன.

திடீரென்று யூனான் பிரதேசத்தினின்று சீனப் படைகள் முன்னேறியது பற்றி ஆச்சரியமாகத் தோன்றலாம். இச் சம்பவம் முன்னே வகுத்த திட்டப்படி தான் நடை பெற்றது. இங்கே நம் வாசகர்களுக்கு, க்யூபெக் மகா நாட்டைக் குறித்து நினைவூட்ட ஆசைப்படுகிறோம். அது நடை பெற்று ஒரு வருஷமாகிற தென்று சொல்லலாம். அங்கே வகுக்கப்பட்ட திட்டந் தான் அது. சில சம்பவங்களை யொட்டித் தான் யூனானி லிருந்து சீனப் படை தாக்க வேண்டு மென்று வகுத்திருந்தார்கள். அதன்படியே நடந்தது.

மியிட்கியானு போர் முனையில் கடுமையான போர் நடைபெறுகிறது. போதாக் குறைக்குக் கடும் மழையும் பெய்கிறது. இந்த ரயில்வே ஸ்டேஷன் மிகவும் முக்கியமானது. பர்மாவின் பல திசைகளுக்கும் இங்கிருந்து ரயில் வண்டிகள் போகின்றன. அது மட்டுமா, அங்கிருந்து ஆறுகள் வழியாகப் பல விடங்களுக்கும் படகுகளில் போகலாம். இதை யொட்டி ஒரு விமானக் கூடமும் இருக்கிறது. இந்த விமானக் கூடத்தை நேசப் படையினர் கைப்பற்றிக் கொண்டார்கள். ரயில்வே ஸ்டேஷனில் முக்கியமான பகுதியையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அந்த ஊரையே கைப்பற்றுவதற்குக் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் ஜப்பானியர் கை ஓங்கவில்லை. "உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா" என்ற பழமொழி ஜப்பானியப் படைத் தலைவருக்கு முற்றும் பொருத்தமாயிருக்கும்.

இத்தாலியிலுள்ள ஹிட்லர் அரண் தகர்ந்தது. 'ஹிட்லர்' என்ற பெயருக்கே அது இழிவல்லவா? ரோமாபுரிக்கும் நேப்பில்சுக்கும் இடையே யுள்ளதற்கு 'ஆப்பியன்' பெரு வழி யென்று பெயர். இந்தப் பெருவழிக்குக் குறுக்கே நேசப் படைகள் வழி மறித்து ரோமாபுரியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. தெற்கு நோக்கி முன்னேறிச் சென்ற நேசப் படைகள், ஆன்சியோவுக்கும் டொராசினாவுக்கும் இடையே எங்கேயோ ஓரிடத்தில் 5-ம் படைகளுடன் போய்க் கலந்து கொண்டன. 5-ம் படை, 8-ம் படைகளின் முக்கியமான பகுதியோடு போராடிக் கொண்டிருக்கும் 12 ஜெர்மன் டிவிஷன்களும் பின் வாங்கிப் போக முடியாதபடி அந்தப் படை பகுதிகள் தடுக்கும். நேசப் படைத் தலைவரான ஜெனரல் கிளார்க் இது வரை தன் முன்னணிக் காரியாலயத்தை முக்கியமான லைனுக்குப் பின்புரம் அமைத்துக் கொண்டிருந்தார். இப்போது அதை கடற்கரைக் காவல் பகுதிக்கு மாற்றிக் கொண்டார். இதிலிருந்து இந்தப் பகுதியில் எவ்வளவு முக்கியமானதோர் போர் நடை பெறுகிற தென்று தெளிவாகத் தெரிகிறது. இப்போது ஜெர்மானியர்கள் பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பின் வாங்குவதற்கு 3 வழிகள் தான் உண்டு. (1) ஆப்பியன் பெருவழி. (2) தற்கால காசிலினா வழி. (3) ஆருவது பெருவழி. இவ்வழிகளில் பின்வாங்கிப் போக முடியாதபடி தடுக்கும் நேசப் படைகளுடன் போராடும் பொருட்டு, கேசல்ரிங் 5 டிவிஷன் படைகளைத் திரட்டி யிருக்கிறார். என்ன தான் திரட்டினாலும் என்ன பலன்? ஜெர்மானியர்களுக்கு பிரான்சிலும் வெடி குண்டு மாரி பெய்து கொண்டிருக்கிறது. "மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி" என்று சொல்லுவார்கள். ஆனால் ஜெர்மானியர்களுக்கோ எல்லாத் திசைகளிலும் இடி தான். அடாது செய்தால் படத்தானே வேண்டும்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பர்மா போர் முனை: ஜப்பான் திட்டம் குலைந்தது.

பர்மியப் போர்முனையில் ஜப்பான் வகுத்திருந்த திட்டங்கள் நேச படைகளின் போக்கினால் குலைந்து விட்டன. கொஹிமாவைச் சுற்றி வளைந்து கொண்டிருந்த ஜப்பானியப் படைகள் இம்பால் எப்போது பிடிபடும் என்று எதிர்ப் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தன. அது போலவே, இம்பாலைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த ஜப்பானியப் படைகள் கொஹிமா எப்போது பிடிபடுமென்று எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தன. இவ்விரண்டு ஆசைகளிலும் மண் விழுந்தது. கொஹிமாவைச் சுற்றி தாம் கைப்பற்றிய இடங்களை நம் படைகள் பலப்படுத்திக் கொண்டன.

வட பர்மாவிலுள்ள மிமிட்கியானா ஜப்பானிய கேந்திர ஸ்தானங்களில் ஒன்று. இங்கே ஒரு ரெயில்வே ஜங்ஷன இருக்கிறது. ஆகவே படைகளையும் தளவாடங்களையும் எளிதில் பல விடங்களுக்கும் அனுப்ப இது மிகவும் உதவி. இவ்வளவு முக்கியமான தோர் கேந்திர ஸ்தானத்தில் நேச நாட்டுப் படைகள் புகுந்து விட்டார்கள். அங்கே கடும் போர் நடைபெறுகிறது. இந்த ரெயில்வே ஜங்ஷனில் மூன்றிலொரு பங்கை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றி விட்டார்கள். இந்த ஊரைப் பிடித்த பிறகு நேசப்படைகளின் கண்ணோட்டம் மோகாங்மீது பாயும். இந்த ஊர் மியிட்கியானாவுக்கு மேற்கே 30 மைல் தூரத்திலுள்ளது. இதையும் கைப்பற்றினால் தான் நேசப் படைகள் தம் நிலைமையை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும். அதன் பயனாக இந்தியாவை ஜப்பானியர்கள் தாக்க கூடும் என்ற அச்சத்திற்கே இட மில்லாது போய் விட்டது.

அரக்கான் பகுதியில், மழை காலத்தைச் சமாளிக்கக் கூடிய தகுந்த இடங்களில் நம் படைகள் ஊன்றிக் கொண்டார்கள். இந்த இடங்களி லிருந்து நம் படைகளை விரட்டிவிட ஜப்பானியப் படை மீண்டுமொரு முறை முயற்சிக்கக் கூடும். கடும் மழை பெய்வதனால் எவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாக நேருமென்று நேசப் படைகள் நன்கு உணர்ந்திருக்கின்றன. அலட்சியம் என்பது நேச நாட்டினருக்குக் கொஞ்சமும் கிடையாது; மழை ஆரம்பமாகு முன்பே, கடுமையாகத் தொடர்ந்து போராட வேண்டி வருமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஜப்பானியர்களின் போக்கைப் பார்த்தால், அவர்கள் எதிர்பார்த்தபடி நடக்க வில்லையென்றும், ஆகவே, அவசர அவசரமாகத் தம் படைகளைத் திரட்டுகிறார்களென்றும் தெரிகிறது.

சீனர்களுக்கு டோக்கியோ பிரசாரம்.

ஜப்பான் பிரசாரகர்களுக்குப் பேசுவதற்கு விஷயம் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் கவனம் சீனா மீது பாய்ந்தது. தாம் சீனாவில் ஏதோ வெற்றிகள் அடைந்து விட்டதாக மனப்பால் குடித்துக்கொண்டு, சீனர்கள் மனதிலும் இது தைக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு ஏதேதோ சொல்லுகிறார்கள். ஜப்பான் இந்தப் போராட்டத்தில் தோற்றுப் போவதேயில்லை என்னும் விஷயத்தை டோக்கியோ வானொலி நிலையம் வற்புறுத்திக் கொண்டே வருகிறது. இந்தப் பிரசாரம் சீனர்கள் மனதிற் பதியவில்லை, ஆனால் ஜப்பானியர் மனதில் தான் நன்றாகப் பதிந்தது.

மிஸ் ஆர்டிமைஸ் கோயர்ட்ஸ் என்பவர் ஒரு அமெரிக்க எழுத்தாளர். யுத்தம் ஆரம்பமானது முதல் டோக்கியோவில் வசித்துக் கொண்டிருந்து விட்டு இப்போது தான் திரும்பி வந்தார். இவர் "டெய்லி மெயில்" என்னும் ஓர் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார். அதில் அவர் கூறுவதாவது:—

"இந்த யுத்தத்தில் தாம் வெற்றியடையப் போவதாக ஜப்பானியர்கள் ஒருவாறு நம்புகிறார்கள். நிச்சயமாகத் தாம் வெற்றி பெறுவோம் என்னும் எண்ணம் அவர்களுக்கு உண்டாவதற்குப் பலமான காரணம் உண்டு. அதாவது, ஜப்பானிய மக்களின் மனம், வாழ்க்கை, போக்கு ஆகியவை சம்பந்தமாக டோக்கியோ அரசாங்கம் அமுல் நடத்தும் பரிபூரண ஆதிக்கந் தான்."

ஆனால் ஜப்பானியப் பிரசாரம் சீனாவில் பலிக்க வில்லை. பர்மியப் போராட்டம் சம்பந்தமாக ஜப்பானியரின் பிரசாரத்திற்குச் செவிசாய்க்க சீனர்கள் மறுத்து விட்டனர். அன்றியும் ஜப்பானியர் வீசிய வலைக்கும், தப்பிக் கொண்டார்கள். நேச நாடுகளிலிருந்து எவ்வித உதவியும் சீனர்களுக்குக் கிடைக்க முடியாது என்று நம்பும்படி செய்ய இடை விடாது ஜப்பானியர்கள் முயற்சித்துக் கொண்டு வந்தார்கள். இவை யனைத்தும் முழுப் பொய் என்று "டாகுங் போ" என்னும் சீனப் பத்திரிகை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது. சென்ற மாதம் கொஹிமாவையும் இம்பாலையும் தாம் கைப்பற்றி விட்டதாக ஜப்பானியர்கள் பிரசாரம் செய்தது பற்றி அப் பத்திரிகை எழுதியதாவது :—

"நாம் நம்பிக்கை இழந்து விடவில்லை. மௌண்ட் பேட்டன் மீதும் ஆக்கின்லெக் மீதும் பிரிட்டிஷ் படைகள் மீதும் இந்திய படைகள் மீதும் நமக்கு நம்பிக்கை யுண்டு."

மணிப்பூர் பொய் வதந்தி: சீனர்கள் உறுதி.

சிங்கப்பூர் வீழ்ச்சிக்கு முன்னதாக நேச நாட்டினர் விடுத்த அறிக்கைகளைப் போலவே தான் மணிப்பூர் போர் முனை பற்றி விடுக்கப்பட்ட அறிக்கைகளும் இருக்கின்றன வென்று ஜப்பானியர்கள் கூறியதற்கு மறுப்பாக, "சோ டாங் போ" என்னும் சீனப் பத்திரிகை கீழ்க் கண்டவாறு ஏப்ரல் மாதம் 18-ம் தேதி எழுதியது :—

"இப்போதுள்ள நிலைமை 1942-ம் வருஷமிருந்த நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்டது. சமீபத்தில் நேசப் படைகள் தம்மை வெகுவாகப் பலப்படுத்திக் கொண்டன."

லார்ட் லூயி மௌண்ட் பேட்டன் பிரபு தன் காரியாலயத்தை இலங்கைக்கு மாற்றிக் கொண்டது பற்றி அப் பத்திரிகை கூறியதாவது :—

"சிங்கப்பூரையும் ரங்கூனையும் கப்பற் படைகளைக் கொண்டு தான் தாக்க வேண்டுமென்று அவர் எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தார். சிங்கப்பூருக்கு அவ்வளவு தூரம் போகாமல், அந்தமான் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டு ரங்கூனிலே போய் இறங்கி விட்டால், இந்தோ-பர்மியப் போர்முனையின் போக்கே மாறிவிடும். நாம் இதை மிகவும் இலேசானதாக மதிக்கிறோமென்று சிலர் நினைக்கலாம். ஆனால், தென் கிழக்காசியாவிலுள்ள படைகளுக்கு, இதற்கு வேண்டிய பலமுண்டு என்பது தான் எம் நம்பிக்கை."

இந்தக் கட்டுரைகளினின்று ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. ஜப்பானியர்களின் தப்புப் பிரசாரத்தின் பயனாக, யுத்தத்தை வெல்ல வேண்டுமென்று சீனர்கள் கொண்டுள்ள மன உறுதி, கொஞ்சமும் மாற வில்லை. நேச நாட்டினரின் பலத்திலும் ஒத்துழைப்பிலும் அவர்களுக்குள்ள நம்பிக்கை கொஞ்சமும் குறைய வில்லை.

வானொலி நாட் குறிப்புக்கள்.

ஜூன்மீ 5உ மாலை 2-05—திருச்சி—"சன் எட் சென்"—மிஸ்டர் எஸ். வேலாயுதம்.
ஜூன்மீ 6உ மாலை 7-00—சென்னை—"யுத்தம் விமரிசம்"—மிஸ்டர் எஸ். கிருஷ்ண மூர்த்தி.
ஜூன்மீ 7உ மாலை 7-15—திருச்சி—"அச்சுக்குரல்" — ரெவரெண்ட் பாதர் எல். எம். பாலம், எஸ்.ஜே.
மாலை 7-00—சென்னை—"அச்சுப் பிரசாரம்"—
ஜூன்மீ 8உ மாலை 7-15—திருச்சி—"செய்திக்கு மூலம்"
மாலை 7-45—சென்னை—"வருங்கால விவசாயம்"—புதுப்பயிர்கள்.
ஜூன்மீ 9உ மாலை 7-00—சென்னை—"அகமும் புறமும் — ஜப்பான் — பொருள் நிலை"—மிஸ்டர் ஏ. முத்தையா.
ஜூன்மீ 10உ மாலை 7-00—திருச்சி—"பிரிட்டனின் சேவை."

நாசக்கார ஜப்பான்

நாஜி ஜெர்மனிக்கும் ஏகாதிபத்திய ஜப்பானுக்கும் ஏற்பட்டுள்ள உறவு சாதாரண சௌகரியத்தை மட்டும் உத்தேசித்து ஏற்பட்டதல்ல; சில பரந்த அடிப்படையான கொள்கைகளிலும் ஒற்றுமை யுண்டு. பொதுவாக வாழ்க்கையின் போக்கிலும், பெரும்பாலான கொள்கைகளிலும் நடை முறைகளிலும் பெருத்த ஒற்றுமை அவர்களுக்குள் காணப்படுகிறது. "தம்மைவிடத் தாழ்ந்த வகுப்பார்கள்" என்று அவர்கள் யாரைக் கருதுகிறார்களோ அவர்களிடம் அவர்கள் நடந்து கொள்ளும் முறையில் இந்த ஒற்றுமை வெளிப்படையாகத் தெரிவதைப் போல வேறெதிலும் தெளிவாகத் தெரிவதில்லை.

இனத் தத்துவம் என்றால் என்ன ?

ஆதிக்கப் பித்தங் கொண்ட அரசியல் வாதிகள் "இனத் தத்துவம்" என்னும் சொற்றொடருக்குக் கொண்டிருக்கும் பொருளுக்கும், அறிவை அடிப்படையாகக் கொண்டு அலசிப் பார்ப்பவர்கள் கூறும் பொருளுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. பாதுகாப்பில்லாதவர்களைச் சுரண்டி தம் பேராசையை நிறைவேற்றிக்கொள்ள, அரசியல் வாதிகள் இந்தப் பதத்தைக் கையாளுகிறார்கள் ; அல்லது நாடு பிடிக்க வேண்டு மென்னும் தம் பேராசையை மறைக்க இதை ஒரு புகலாக்க கொண்டிருக்கிறார்கள். **ஜூலியன் ஹக்ஸ்லி** என்னும் அறிஞர் இதற்குக் கூறும் பொருளாவது :—

"ஒரு பொதுவான தனிப் பரம்பரையில் வழி வழி வந்த புறக்குணமும் அகக் குணமும் பெற்றிருத்தல்"

மனிதனின் மனம் ஒய்ந்திருப்பதில்லை. ஓரிடத்திலிருந்து வேற்றிடத்திற்குப் போக வேண்டு மென்னும் ஆசை உந்துகிறது. மற்ற விலங்கினங்களைப் போலன்றி, வேறுபட்ட பரம்பரையும் தோற்றமுங் கொண்ட கூட்டத்தாரில் தனிப்பட்டவர்களுடன் கலந்து வாழ மனிதன் ஆயத்தமா யிருக்கிறான். இதன் பயனாக சென்ற சில நூற்றாண்டுகளில் மனித இனம் முழுதும் ஒரே கலவையாகி விட்டது. ஆகவே, தூய்மையான ஒரு தனி இனம் என்பது அடியோடு அழிந்துவிட்டது. இந்தக் காலத்தில் கலப்பில்லாத 'நார்டிக்' இனமென்றோ, 'நிப்பான்' இனமென்றோ கூறிக் கொள்ளுவது தவறாகும்.

தேவலோகத்திலிருந்துதான் வரட்டுமே !

என்றாலும் நான் ஒரு கலப்பில்லாத இனத்தைச் சார்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளுவது பெருமிதமானதாகத் தோன்றலாம். ஏனென்றால், தான் கடவுள் படைப்பில் நேர்முகமாகப் பிறந்தவனென்றும், தன் இனம் அப்பட்டமானதென்றும் கூறிக் கொண்டு ஆதி மனிதனிடம் நேர்முக உறவு கொண்டாடப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்டதோர் போக்கைப் பற்றி ஆட்சேபனையே கிடையாது, நேரே தேவ லோகத்திலிருந்து இறங்கி வந்து விட்டதாக வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். உலகமும் எது வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். ஆனால், அப்படிபட்ட மனப் போக்குள்ள ஒருவன் எப்போது கெட்டவனாகிறான் ? "மற்றவர்கள் யாரும் உயிர் வாழத் தகுதியற்றவர்கள் ; அவர்கள் சொத்துக்களைத் திருடியும் கொள்ளையடித்தும், அவர்களைக் கொல்ல வேண்டும் ; எனக்கு விருப்பமானதை யனுபவிக்க என்னைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது." இந்த மனப்பான்மையினால் தான் அவன் கெட்டவனாகிறான். அப்போது அந்த எண்ணங்களை, அவனை விட்டு விரட்டியடிக்கும் பொருட்டு அவன் தலையில் அடிக்க பிறருக்கும் உரிமை யுண்டல்லவா ? ஜப்பானியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் அவர்களுடைய ஆட்சியாளர்கள் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா ? உலகம் முழுவதிலும் தம்மைத் தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை. உலகத்தையே தாம் இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். மற்ற வெள்ளை, மஞ்சள், பழுப்பு, கருப்பு மனிதர்கள் மிருகங்கள் தான். அவசியம் என்று தோன்றுகிற போது தம் மனம் போல உபயோகிக்கப்படவும் அடியோடு அழிக்கப் படவும் கூடியவர்கள்.

20-ம் நூற்றாண்டிலும் இதுவா நிலை ?

நூற்றுக் கணக்கான வருஷங்களாக நாகரிக முதிர்ச்சி யடைந்துங்கூட, இந்த 20 ம் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட ஒரு கூச்சல் கிளம்புமா என்பது சந்தேகிக்கக் கூடிய கட்டந்தான். அதைவிட சந்தேகிக்கக் கூடிய கட்டம் என்னவென்றால், இப்படிப்பட்ட கெட்ட தத்துவங்கள் அந்த நாடுகள் முழுதும் பாவியிருக்க முடியுமா என்பது தான். இதற்குச் சந்தேகமே யில்லை. ஜெர்மனியிலும் ஜப்பானிலும் இவை பரவியிருக்கின்றன. ஜப்பானியன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஒரு எண்ணம் வேரூன்றி யிருக்கிறது. அதாவது : "நான் கடவுள் பரம்பரையில் பிறந்தவன் ; உயர் குடியிற் பிறந்த என்னைத் தவிர மற்றவர்களுக்கு என்னை விட உரிமை எதுவும் இருக்கப்படாது" என்பது தான் அந்த எண்ணம்.

ஜப்பானிய அரசர் சாதித்ததென்ன ?

சென்ற முக்கால் நூற்றாண்டாக ஜப்பானிய அரசர்கள் தம் குடிகளுக்குச் சாதித்ததென்ன ? அவர்களடைந்த தெல்லாம் செல்வமும் இராணுவ பலமுந் தான். இவை இரண்டுந் தவிர, மற்ற வகைகளில், மத்திய ஆசியாவிலுள்ள சதுப்பு நிலங்களில் சுற்றிக் கொண்டிருந்த வீடு வாசலில்லாத காட்டு மிராண்டிகளுக்கும் தற்போதைய ஜப்பானியர்களுக்கும் வேற்றுமை யில்லை யென்று சொல்லலாம். மற்றவர்களை விடத் தாமே உயர்ந்த இனத்தாரென்று ஜப்பான் மக்கள் மனதார நினைக்கிறார்கள் என்றோம் ; அது போலவே, தம் சக்கரவர்த்தி, கடவுளின் அவதாரம் என்றும் நினைக்கிறார்கள். இந்த இரண்டு உறுதியான எண்ணங்களையும் பயன்படுத்திக் கொண்டு, நாடு முழுவதையுமே பைத்தியக்காரர்களாக்கி விட்டார்கள். என்றாலும், இதனால், ஜப்பானிய **மக்கள் அனைவருக்கும் நன்மையில்லை.** அரசியல் ஆதிக்கமும், இராணுவ ஆதிக்கமும், பொருளாதார ஆதிக்கமும் ஒரு சிலர் வசமே பொதிந்திருக்கின்றன. நிர்வாகத்தில் தரைப் படையும் கப்பற் படையும் ஆதிக்கம் செலுத்துகிறது. இவ்விரண்டிலும் முதலாளிகள் ஆதிக்கம் தான் ஓங்கி யிருக்கிறது.

கடவுளின் நேர் பரம்பரை !

இவர்கள் பெரும் பேராசைக்காரர்கள். நாடு பிடிக்க வேண்டு மென்னும் பேராசையினால் தூண்டப்பட்டு சதா போராடிக் கொண்டிருக்கும் போர்த் தலைவர்களைக் கொண்டதோர் சிறு கூட்டம் இது. இந்தக் கூட்டத்தார் கடவுளின் நேர் பரம்பரையாம். இவர்கள் 'யமாடோ' இனத்தைச் சேர்ந்தவர்களாம். உலகம் இருப்பதே அவர்களுக்காகத் தானாம். அவர்களுடைய சொந்த நாட்டிலுள்ள பொது மக்களையும் தம்மோடு அவர்கள் சேர்த்துக் கொள்ளுவதில்லை. பொறுமையுள்ள குடியானவன் தன் நிலத்தைப் பாடுபட்டு உழுகிறான். கடலில் நேரக் கூடிய ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது கரையாளன் தன் வயிற்றுப் பாட்டிற்காகப் படகேறிப் போகிறான். தொழிற்சாலைகளில் நெற்றி வெயர்வை நிலத்தில் விழப் பாடு படுகிறவர்கள் ஜப்பானின் சர்வதேச வியாபாரப் பொருட்களையும், தளவாடங்களையும், உதவுகிறார்கள். படித்தவர்கள் அரசாங்க உத்தியோகங்களிலமர்ந்து மிக மிகக் கேவலமான முறையில் வாழுகிறார்கள். ஜப்பானின் உயர் நிலைக்கு இவர்கள் தான் காரணம். இதற்கென்ன உண்மையான பொருள் என்றால், முதலாளிகளும் இராணுவத்தாரும் சேர்ந்த கூட்டத்தின் உயர் நிலைக்கு இவர்கள் தான் காரணம், என்பது தான்.

சொந்த நாட்டினரையே சூறையாடினர்

ஜப்பானியர்கள் செய்யும் பெரும் தீமைகளுக்கு இவர்கள் தான் காரணம். கொள்ளையடிக்க வென்றே அவர்கள் கிளம்பி யிருக்கிறார்கள். தம் சொந்த நாட்டினரையே ஈவிரக்கமில்லாமல் சூறையாடினார்கள். பிறகு, இப்போது மற்ற நாட்டவர்கள் மீது கவனத்தைச் செலுத்துகிறார்கள். 'ஜப்பான் பெருக வேண்டும்' என்பது தான் அவர்களுடைய ஆசை. ஜப்பானைப் பெருக்கும் முயற்சியில், கடவுளாலும் மனிதனாலும் விதிக்கப்பட்ட எல்லாக் கட்டுப் பாடுகளையும் மீறிவிட்டனர். ஜப்பானியர்கள் சூறையாடும் முறைகள் மகா முரட்டுத் தனமானவை ; மிருகத் தனமானவை. தம் இனத்தாரல்லாத

(8-ம் பக்கம் பார்க்க)

<u>சிறு கதை.</u>

வீரச்சுவை

(கோவைக்கிழார் எழுதியது.)

வட நாட்டில் ஒரு குக் கிராமம். அதில் ஒரு சிறிய ஓட்டு வில்லை வீட்டில் ஒரு சிறு சமயல் அறை. தன்னந்தனியே ஒரு அழகிய பெண் அடுப்பண்டை உட்கார்ந்து கொண்டு அப்பம் சுட்டுக் கொண்டிருந்தாள். அவள் திரு வயிறு வாய்த்திருந்த படியால் (கர்ப்பம்) உடல் கனத்திருந்தது. முகத்தில் நல்ல சோபை சொலித்துக் கொண்டிருந்தது. அவளுக்குத் துணை ஒரு சிறு பெண் தான். அவளோ நெருங்கிய சொந்தக்காரி. ஆயினும் இராணுவ வகுப்பில் உதித்தவள். ஆகையால் யாதொரு அச்சமும் இன்றி, தனியே வசித்து வருகிருள். அடுத்த வீடுகளில் உறவினர் இருக்கும் போது எவ்வித அச்சமும் தோன்ற வகையில்லை அல்லவா?

அப்பம் சுட்டுக் கொண்டிருக்கையிலே ஏதோ நினைத்துக் கொண்டு இருந்தாள். அன்று காலை தான் ஊரிலே ஒரு பெரிய வதந்தி கிளம்பியது. ஐரோப்பியப் போருக்கு அப்பிரதேச சேனைப் புறப்படவேண்டும் என்ற உத்தரவு ஆனதாக எல்லோரும் பேசிக் கொண்டிருந்ததேயாம். சாந்தா தேவிக்கோ தன் கணவன் எங்கே அனுப்பப்படுவாரோ என்றதிகில் ஏற்பட்டது "தான் வயிறு வாய்த்திருக்கும் போது, அவர் போருக்குச் சென்று விட்டால், தனக்குக் கதி யார்" என்று எண்ணிஞள். உடனே கண்ணிலிருந்து இரண்டு துளிகளும் விழுந்தன.

இவ்வாறு சாந்தாதேவி எண்ணிக் கொண்டிருக்கையில் தெருக்கதவு தட்டப்பட்டது. "சகி," கதவைத் திற என்று வேலைக்காரப் பெண்ணைக் கூப்பிட்டாள். பெண்ணும் கதவைத் திறந்தாள்.

"சாந்தா, என்ன செய்து கொண்டிருக்கிருய். ஒரு செய்தி இங்கே வா சொல்லுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஒரு யவ்வன வீரன் உள்ளே நுழைந்தான். அவ்வினிய தொனியைக் கேட்டதும் சாந்தைக்கு அளவில்லாத மகிழ்சசி உண்டாயிற்று. கண்ணைத் துடைத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

"என்ன இத்தனை நாளா? என்னை மறந்து விட்டீர்களோ? ஓய்வு கிடைக்க வில்லை? என்னமோ இந்தக் கொடிய வேலை அப்படித் தான். அப்பம் சுட்டிருக்கிறேன். கொண்டு வருகிறேன். உட்காருங்கள்" என்று சொல்லி நீர்ச் சொம்பு எடுத்துக் கொடுத்தாள்.

வந்தவன் சாந்தையின் முகத்தைப் பார்த்தான் கண்ணில் நீர்த் துளி துடைக்கப்பட் டிருந்ததை அறிந்தான். "சாந்தா, என்ன அழுது கொண்டிருந்தாயா? நீ க்ஷத்திரியப் பெண் அல்லவா, அழலாமா? என்ன அப்படிப்பட்ட துயரம் வந்தது? எனக்குக் கடிதம் எழுதலாகாதா" என்று சொல்லிக் கொண்டே மணையில் உட்கார்ந்தான். "இல்லை, நமது ஊர்ப் பட்டாளம் வெளி நாடு செல்லுகிறதாக ஊரில் வதந்தி உலாவுகிறது. தாங்களும் போய் விடுவீர்களோ என்ற திகில் ஏற்பட்டது. நான் பூரண கருப்பமாய் இருக்கும் போது என்னசெய்வது? யாதொரு துணையும் இல்லையே என்று எண்ணினேன்" என்ருள்.

"அட, அசடே, நீ படித்த பெண் அல்லவா? நாமோ வீரர் வகுப்பில் பிறந்தவர்கள் அல்லவோ? நம் முன்னோர்கள் பெருமைகளை மறந்து விட்டோமா? இந்தப் பேடித்தனத்தை விட்டுவிடு. அந்த வதந்தி உண்மை தான். அதனைச் சொல்லி உன்னிடம் விடை பெற்றுக் கொள்ளவே தான் வந்தேன்" என்று நாராசம் போல் பேசிஞன்.

"ஐயோ, எண்ணினது உண்மையாய் விட்டதே. அந்தப் பாவி ஜர்மானியர்கள் தொலைய மாட்டார்களா? நமது குடும்பத்திற்கே தலைமுறை தலைமுறை விரோதிகளாக வாய்த்திருக்கிருர்களே. தாங்கள் போய்விட்டால் எனக்கு என்ன கதி? என் நிலைமையைக் கவனிக்கக் கூடாதா? ஒரு வருடம் ஓய்வு எடுத்துக் கொண்டுப் பின் போகலாகாதா?"

"என்ன நீயும் இப்படிப் பேசலாமா? தைரியமாக இரு. நீயோ வீரப்பெண். நம் முன்னோரின் வீரச்செயல்களைப் பேசிக்கொண்டிருந்த நீ, இப்படி சமயத்தில் பேடியாகலாமா. எத்தனை முறை நீயே

'கல் நின்ருன் எந்தை, கணவன்
களப்பட்டான்
முன் நின்று மொய் அவிந்தார்
என்னையர்—பின் நின்று
கை போய் கணை உதைப்பக்
காவலன் மேல் ஓடி
எய் போல் விழுந்தான் என் ஏறு.'

என்று பாடிக் கொண்டிருந்தாய். ஆகவே தைரியமாய் இரு. கூடிய சீக்கிரத்தில் நான் வெற்றியுடன் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அப்பத்தை மென்ருன் இருபா சிங்கு.

* * * *

"சாந்தா, உனக்கு ஒழுங்காகப் பணம் வரும். யாதொரு கவலையும் வேண்டாம். ஓய்வு என்பது நினைக்கவே கூடாது. போர்க் காலத்தில் எது சொன்னாலும் கேட்க மாட்டார்கள் என்பது உனக்குத் தெரியும். குடும்பத்திற்குச் சௌகரியங்கள் எதுவும் செய்து தருவார்கள். அடுத்த வீட்டுச் சிறிய பாட்டனரிடம் சொல்லி வைத்திருக்கிறேன். அவரும் பாட்டியாரும் வேண்டிய ஒத்தாசை புரிவார்கள். சுகமாக நாள் எண்ணிக் கொண்டு இரு. விடை கொடு."

"சுகம், என்ன சுகம்," நீங்கள் போருக்குச் சென்று விட்டால் எனக்கு என்ன சுகமோ! தெய்வம் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி கண்ணீர் உகுத்தாள்.

சிறிது நேரம் இருபா சிங்கு மௌனமாக இருந்தான். அவன் மனதில் பல விதமான எண்ணங்கள் தோன்றின. மிகவும் கடிய சித்தனுகவும் வீரதீரனுகவும், இருந்தபோதிலும், தன்மனைவியின் நிலையைக் காண அவன் மனம் கலங்கியது. அவன் கண்ணிலிருந்து ஒரு துளி நீரும் விழுந்தது. உடனே அதனைத் தெரியாமல் துடைத்து விட்டான். தன் பெட்டியைத் திறந்து ஒரு சிறு வெள்ளி டப்பியை எடுத்துக் கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத்தான்.

"சாந்தா, இந்த டப்பி ஒரு சிறந்த மணி, இரக்ஷை என்றே சொல்ல வேண்டும். என் தகப்பனுர் எனக்கு வைத்து விட்டுப் போன சிறந்த பொக்கிஷம். பெரும் போரில் 25 ஆண்டுகளுக்கு முன் உயிர் துறந்த என் அருமைத் தகப்பனுர் என் அருமை அன்னைக்கு என் பொருட்டாக அனுப்பிய விலையற்ற மாணிக்கம். இதுவே நம் குடும்பத்திற்கும் நம் பின்னேருக்கும் ஏற்பட்டுள்ள சொத்து, இதனைப் பத்திரமாக வைத்துக் கொள்ளு. நான் திரும்பி வந்தால் அதை உன்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுகிறேன். நான் வராவிட்டால் உனக்குப் பிறக்கும் குழந்தைக்குக் கொடு. அவன் அப்போது ஒரு சிறந்த வீரன் ஆவான்" என்று சொல்லிக் கொடுத்தான்.

சாந்தாதேவி அதனைப் பெற்றுக் கொண்டு, தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"சாந்தா, நான் போருக்குச் சென்ற பிறகு எப்போதாவது உனக்கு அதிக துயரம் சம்பவித்தால் அந்த டப்பியைத் திறந்து பார். உன் துயரம் போய் விடும்" என்று சொல்லிச சிறிது நேரம் பேசி விட்டு மற்ற உறவினர் வீடுகளுக்கு விடை பெற சென்ருன் இருபா சிங்கு.

* * * *

கணவன் போருக்குச் சென்ற பிறகு மூன்று நாள் ஆயிற்று. சாந்தாதேவி அழுது கொண்டே இருந்தாள். அடுத்த வீட்டுச் சிறிய பாட்டனும் பாட்டியும் வந்து பலவிதமாகச் சமாதானம் சொன்னர்கள். அவள் துக்கம் தீரவில்லை.

"நம் குலம் வீர குலம். கணவன்மார் இறந்தாலும் மனைவிகள் அழக் கூடாது. அப்படி யிருக்க நீ, அழக் கூடாது? என்று சொன்ஞர் அக்கிழவஞர்.

ஆஞல் சாந்தாவிக்கோ துக்கம் அடங்கவில்லை. தன்னந் தனியாக இருக்கையில்

(8-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷாரின் தீரம்

(ஸ்ரீமதி இந்திராணி பாலசுப்பிரமணியம்)

ஸ்ரீமதி இந்திராணி பாலசுப்பிரமணியம்

சாந்தம், சகிப்புத்தன்மை, தீரம், பொறுமை முதலிய குணங்கள் எந்த நாட்டினரிடமிருக்கிறதோ அங்கே தான் ஜெயம் என்பதையும், "பொறுத்தவர் பூமி ஆள்வார்" என்பதையும், பல நூல்களினாலும் சரித்திரங்களினாலும், கேட்டும் படித்தும் இருக்கிறோம். அதை இப்போது நேரில் பிரிட்டிஷாரிடம் காண்கிறோம். யுத்தம் ஆரம்பித்து 5 வருடங்களில், ஜெர்மனி ஐரோப்பாக் கண்டத்தையே நாசம் செய்து எறக்குறைய எல்லா நாடுகளையும் கைப்பற்றிக் கொண்டது. ஜப்பான் ஆசியாவை அலற வைத்து, பல தீவுகளையும் நாடுகளையும் பிடித்துக் கொண்டது. இவ்வளவு நாட்டையும், பொருளையும், மக்களையும், இழந்தும், பிரிட்டன் தன் பொறுமையை இழக்கவில்லை. தன் தைரியத்தைத் தளரவிடவில்லை. இது தான் தீரம்.

ஒரு ஆச்சரியந்தானே

இது தான் பொறுமை, 3 நாளைக்கு ஒரு ஊரும், 30 நாளைக்கு ஒரு தேசமாக, ஐரோப்பாவையே தனக்கு அடிமைப்படுத்திக் கொண்ட ஜெர்மனி, கிழக்கே சென்று ரஷியாவுடன் கொடும் போர் புரிந்து பாதி நாட்டையும் பிடித்துவிட்டு, ப்ரான்ஸ் தேசத்தில் கலேய் துறைமுகப்பட்டினத்தை பிடித்தும், அங்கிருந்து 25 மைல் தூரத்திலுள்ள இங்கிலீஷ் கால்வாயை தாண்டி கிரேட் பிரிட்டனை பிடிக்க முடியாதது ஒரு ஆச்சரியமாகத் தானே இருக்கிறது. கடலெல்லாம் தாண்டி, நீர்மூழ்கி கப்பல்களினால் நேச நாட்டினரின் கப்பல்களை நாசப்படுத்திக் கொண்டிருந்த ஜெர்மனியர், சிறிய கால்வாய் ஆகிய இங்கிலீஷ் கால்வாயைத் தாண்ட முடியவல்லையே! மேலும் கிரேட் பிரிட்டனிலுள்ள ஜனத் தொகையோ சொற்பம். அது ஓர் சின்னத் தீவு. அந்தத் தீவை படையெடுத்துப் பிடிக்க முடியவில்லை!

இங்கிலீஷ் குண்டுகளுக்கு இரை.

அது எதனால் என்று யோசித்துப் பார்க்கும்போது தான் ரகசியம் தெரிகிறது. அது என்னவென்றால், பிரிட்டிஷ் கால்வாயில் ஜெர்மனி கப்பல் கால் வைத்தவுடன் அதம் ஆகிவிடும் என்கிற பயத்தினால் அல்லவா? நாஜிகள் கப்பலிலோ, பாராச்சூட்களிலோ, சைனியங்களை கிரேட் பிரிட்டனில் படை எடுக்க இறக்குவார்களேயானால், அவ்வளவு பேரும் இங்கிலீஷ் குண்டுக்கு இரையாகி விடுவார்கள், என்பதினால் அல்லவா? இங்கிலீஷ் கால்வாயில் ஜெர்மனி கப்பல் போக முடியாமலும், நாஜி சைனியங்கள் ஆகாய மார்க்கமாய் பலூனில் இறங்க முடியாமலும் இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், ஆங்கிலேயருடைய மன உறுதியும், அஞ்சா நெஞ்சமும் ஐக்ய மனப்பான்மையும், நாடு தான் பெரிது உயிர் பெரிதல்ல என்று கருதும் மனோ நிலையும் ஆகிய வீர குணங்களேயாகும்.

என்னே அவர்கள் தீரம்!

சென்ற 5 வருடத்தில் பிரிட்டன் மீது ஆயிரக்கணக்கான எதிரி விமானங்கள் படையெடுத்துச் சென்று சரமாரியாக வெடிகுண்டுகளை வீசி, அரண்மனை, கோயில் கொத்தளங்கள், வைத்திய சாலைகள், பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகள், முதலிய அநேக இடங்களை தினப்படி பாழ்படுத்திக் கொண்டும், பல பொருள்களையும், ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தியும், இங்கிலாந்திலுள்ள மக்கள் சற்றும் பீதி அடையாமலும் பொறுமையை இழக்காமலும் வெகு தீரத்துடன் அங்கேயே இருந்து கொண்டு பலவிதமான போர் சேவையில் ஈடுபட்டு வேலை செய்கிறார்கள். இங்கிலாந்தில் விமானத் தாக்குதல் இல்லாத நாளே இல்லை. எதிரி விமானத் தாக்குதலினால் ஒரு பக்கம் வீடு இடிந்து விழும். மறுபக்கம் புது வீடு நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபடுவார்கள். எதிர் வீடு மட மட வென்று சாயும், சுற்றிலும் வெடி மருந்து புகை சூழ்ந்து கொள்ளும். ஆனால் வீட்டிலுள்ள பெண்கள் கலவரப்படாமல், ரோட்டில் அங்கும் இங்கும் ஓடாமல், ஒன்றையும் கவனியாமல் தங்கள் பிள்ளைகளுக்கு பாலூட்டுவதும், வீட்டு வேலையைக் கவனிப்பதும் தங்கள் வேலையிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறார்களாம். ஒரு நாள் பக்கத்து வீட்டின் மேல் குண்டு விழும்போது, தன் வீட்டில் ஒருவர் தேனீர் விருந்து வெகு உல்லாசமாக நடத்தினாராம். என்னே அவர்களுடைய தீரம்!

போர்ச்சேவை :— அங்குள்ள மக்கள் 100-க்கு 100 யுத்தத்தில் சேர்ந்து வேலை செய்கிறார்கள். தற்கால அபாயத்தை உணர்ந்து நாட்டையும், உலக நாகரிகத்தையும், மக்களையும் காக்கும் பொருட்டு, தம் சௌகர்யங்களைத் துறந்து, சரியான உடையின்றி உணவின்றி, சுக்போகங்களையெல்லாம் தியாகம் செய்து சோம்பலின்றி பொறுமையுடன் வேலை செய்கின்றார்கள்.

வேறேது தியாகமும் தீரமும்?

அவர்களிடத்தில் உணர்ச்சி மிகுந்த உழைப்பு காண்கிறது. உடலுழைப்பிலோ மன உணர்ச்சியிலோ, தீவிர முயற்சியிலோ, அவர்கள் சற்றும் குன்றிவிடவில்லை. வாழ்க்கை நலன்கள், இன்பங்கள், வசதிகள் போன்றவைகள் பெருவாரியாகக் கிடைக்காமலிருந்தும் அவற்றையெல்லாம் கவனியாமல் யுத்த சேவையில் சேர்ந்து கஷ்டப்பட்டு உழைப்ப தொன்றிலேயே கவனம் எண்ணம் செலுத்தி உணர்ச்சியுடன் வேலை செய்வதனால் குண்டு விழுவதும், வீடு இடிவதும் அவர்களால் கவனிக்க முடிவதில்லை. அதை லக்ஷியம் செய்வதும் கிடையாது. அவர்கள் எண்ணமெல்லாம் நேச நாட்டினருக்கு வெற்றியும், நாஜிஸத்துக்குத் தோல்வியும் ஏற்படுவதும் உறுதி; அந்த நாள் வரையிலும் உழைத்தே தீருவோம் என்கிற ஒரே எண்ணம் தான். இதைவிட வேறே தியாகத்தையும், தீரத்தையும் காண முடியுமா?

மாணவர்கள் சகிப்புத் தன்மை

கல்விக் களஞ்சியமென்பது ஆக்ஸ்போர்ட். அங்கே யுனிவர்சிட்டிகளும், பல கலாசாலைகளும் தவிர, வேறே ஒன்றும் கிடையாது. அது அழகிய தெம்ஸ் நதிக் கரையில் அமைந்துள்ள அழகிய நகரம். அது தற்சமயம் விமான உற்பத்தி சாலையாயும், சைனியங்களுக்கு இருப்பிடமாகவும், வெடிமருந்து சாலையாகவும் இருக்கிறது. அதோடு சேர்ந்து பல மாணாக்கர்கள் படிக்கின்றனர். இது தான் மாணவருடைய சகிப்புத் தன்மை.

(9-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

கண்ணீர் உகுத்துக் கொண்டே இருப்பாள். அதனை அறிந்த கிழவனுர் மறுபடியும் ஆறுதல் சொன்னுர்.

"அம்மா, சாந்தா, மனிதர் இறப்பது இயற்கை. வீட்டில் இருந்து இறப்பதைக் காட்டிலும் போரில் இறப்பதே க்ஷத்திரிய குலத்தார்க்கு அழகு. நான் இராணுவத்தில் இருந்த போதிலும் போரில் இறக்காமல் ஒய்வு பெற்ற பேடி ஆகி விட்டேன். எனக்கு வீர சுவர்க்கம் கிடைக்குமா? உன் கணவனுக்கு அல்லவோ கிடைக்கும்," என்ருர். இந்த வேதாந்தம் அவள் காதில் ஏற வில்லை. மீண்டும், "நீ அழுது கொண்டே இருந்தால், உன் வயிற்றில் இருக்கும் குழந்தை பேடியாவான். அவன் பொருட்டாகவாவது அழ வேண்டாம்" என்ருன். அதைக் கேட்டதும் வெட்கப்பட்டுச் சிறிது நேரம் அழாமல் இருந்தாள் சாந்தை.

* * *

"தாத்தா, நீங்கள் சொல்வது சரிதான். ஆனல் என் அபாக்கிய நிலையைப் பார்த்தீர்களா? பிரசவ வேதனை வந்தால் எனக்கு யார் உதவி?"

"என்ன சாந்தா, நீ பச்சைக் குழந்தையா, பாட்டி யிருக்கிறதில்லையா. குசலவர்களும் சிவகனும் எப்படிப் பிறந்தார்கள். சீதா தேவிக்கும் சச்சந்தன் பட்ட மகிஷிக்கும் பிரசவ வேதனையில் அவர்கள் கணவர்களா உதவியாக இருந்தார்கள்? நீ, யாதொரு கவலையும் பட வேண்டாம்" என்று ஆறுதல் சொன்னுர் சிறிய பாட்டனுர்.

சாந்தாவுக்கு துக்கம் நீங்கவில்லை. அழுது கொண்டே காலம் போக்கினுள். ஒரு நாள் தன் கணவன் கொடுத்த வெள்ளி டப்பி ஞாபகம் வந்தது. அது துயரத்தைப் போக்கிவிடும் என்ற நினைவும் வந்தது. உடனே தன் பெட்டியைத் திறந்து அந்த டப்பியை எடுத்தாள்.

அதை எடுக்க எடுக்க, கை நடுங்கிற்று. நெஞ்சு தடுமாறிற்று. ஆனுலும் துயரம் போய்விடும் என்ற நம்பிக்கை தன் மனக் கண் முன் நடனம் செய்தது.

அதில் மாயமோ மந்திரமோ, யந்திரமோ தந்திரமோ, மணியோ, ஒளஷதமோ எது தான் இருக்கிறதோ என்று எண்ணினுள். விலையுயர்ந்த இரத்தினம் இருந்தால் அதனைத் தனக்குப் பிறக்கும் குழந்தையின் கழுத்தில் அணிவிக்க வேண்டும் என்று எண்ணினுள்.

டப்பியைத் திறந்தாள் உள்ளே மணியும் காணும் மந்திரமும் காணும். ஒரு காகிதச் சுருள் இருந்தது. இது தான் துக்க நிவாரணி என்று எண்ணினுள். அச்சுருளைப் பத்திரமாக விரித்து வாசித்தாள். அதில் அடியிற் கண்டவாறு எழுதியிருந்தது.

* * *

போர்க்களம்,
5—10—1916.

"எனது அன்பிற்குரிய மனைவி லலிதா தேவிக்கு கணவன் கருணு சிங்கு ஆசீர்வாதம் செய்து அனுப்பியது. கடவுள் கருணை சுரப்பானாக!

நான் இப்போது ஐரோப்பாக் கண்டத்தில் ஒரு போர்க்களத்தில் ஊர்ப் பேர் தெரியாத இடத்தில் வைத்திய சாலையில் படுத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடன் அருகில் 100 பேர் சிகிச்சையில் இருக்கிருர்கள். எனக்கு கை போய்விட்ட படியால் எனது நண்பர் ஒருவரைக் கொண்டு இக்கடிதம் எழுதியிருக்கிறேன். அத்தாட்சிக்காக என் இரத்தத்தில் துவைத்த பெருவிரல் அடையாளம் இக்கடிதத்தில் இட்டிருக்கிறேன்.

நானே ஜெர்மானியர்களுக்கு இளைத்தவன் அல்ல. அவர்களுக்கு அஞ்சினவனல்ல. இதற்குள் நூற்றுக் கணக்காக ஜெர்மனியர்களை நரகத்திற்கு அனுப்பி விட்டேன். எனக்குப் பல விருதுகள் கிடைத்திருக்கின்றன. என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஜெர்மானியர் அஞ்சி ஓடுகின்ருர்கள். நம் குலம் வீர குலம் அல்லவா?

ஆனல் ஜெர்மானியர்கள் மகா வஞ்சகர்கள். என்னைக் கொல்வதற்கு நேரில் வாராமல் வஞ்சகமாக ஒரு ஒற்றனை அனுப்பினுர்கள். அந்த வேவுகாரன் நான் அறியாமல் என் முதுகுப் புறம் வந்து என்னைக் குத்தி விட்டான். எதிரே வந்திருந்தால் எமன் உலகிற்கு அனுப்பி யிருப்பேன். நான் காலையில் குளித்துவிட்டு ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தேன். ஒரு ஜெர்மானியன் பூனை போல் பின்னல் பதுங்கி வந்து ஈட்டியால் என்னைக் குத்தினன். என் இடது கையிலும் காலிலும் பெருங் காயங்கள் ஏற்பட்டன. திரும்பினேன். அவன் ஓடத் தொடங்கினுன். கத்தினேன். காவலாளிகள் அவனைப் பிடித்து எமனுலகு அனுப்பிவிட்டார்கள். பின்னல் அடையாளம் கண்டதில், அவன் ஒரு பெரிய ஜெர்மானிய சதிகாரன் என்று தெரிந்தது.

இக்கொடிய அரக்கர்கள் நேரில் போர் செய்ய முடியாமல் வஞ்சனையால் சண்டை பிடிக்கின்றனர். இவர்கள் கொடிய பகைவர்கள். நமது குல விரோதிகள். இவர்கள் மீது பழி வாங்க வேண்டும்.

என் காயம் பெரிதாக இருக்கிறது. நான் பிழைப்பது அரிது. நான் ஓய்வு பெற்று ஊரிலிருந்து வந்த ஆறு மாதங்களில் வீர சுவர்க்கம் போகும் வழி ஏற்பட்டு விட்டது. ஆனல் துக்கப்பட வேண்டாம். நாட்டிற்கும் குலத்திற்கும் என் உயிரை தியாகம் செய்கிறேன்.

நான் போருக்குப் புறப்படுகையில் நீ கர்ப்பவதியாக இருந்தாய். கூடிய விரைவில் உனக்குக் குழந்தை பிறக்கும். நீ துயரப்படக் கூடாது. அது நமது குல தருமம். குழந்தைக்கு வீரபா சிங்கு என்று பெயர் வை. ஆண் குழந்தை பிறக்கும் என்பது என் நம்பிக்கை. அவன் என் குடும்ப மானத்தைக் காப்பாற்றுவான். எனக்காக ஜெர்மானியிடம் பழி வாங்குவான். ஆகவே அவனை பெரியவனனவுடன் இராணுவத்தில் அமர்த்தி அவனுக்கு இந்தக் கடிதத்தை ஒரு வெள்ளி டப்பியில் வைத்து ஒரு மணி மந்திரமாகக் கொடு. அதுவே நான் உனக்கு இடும் கட்டளை. புத்திசாலியான உனக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. கடவுள் உன்னைக் காப்பாராக!"

அன்புள்ள,
கருணு சிங்கு.

(இங்கே இரத்தத்தினல் விரல் அடையாளம்.)

இக்கடிதத்தை வாசித்தாள், சாந்தா தேவி மறுபடியும் வாசித்தாள். கண்ணில் இருந்த நீர்த்துளிகள் வரண்டன. அது முதல் அவள் அழுததை எவரும் கண்டதே இல்லை. "நம் குலத்தோர் வீரர்கள், இறப்பிற்கு அஞ்சாதவர்கள்" என்று அறிந்தாள். 'பழிக்குப் பழி' என்பதே அவள் கண்களில் மிளிர்ந்தது.

பின்னல் அவளுக்கு உதித்த குழந்தைக்கு வீர சிங்கு என்று பெயர் இட்டதும் அவனுக்கு யந்திரமாக வெள்ளி டப்பி அமைந்ததும் முதலிய விவரங்களை நாம் இனி குறிக்காமலே ஊகித்துக் கொள்ளலாம் அல்லவா?

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

வர்களுக்கு மனிதனுக்கு இன்றியமையாத உரிமைகளை வழங்குவதற்கு முடியாதபடி, தாம் உயர் ஜாதி என்னும் எண்ணம் தடுக்கிறது.

கைப்பற்றிய நாடுகளின் நிலை.

அவர்கள் கைப்பற்றி யிருக்கும் நாடுகளிலுள்ள மக்கள், சொத்துக்கள், பெண்களின் கற்பு ஆகியவை ஆபத்திற்குள்ளாகி யிருக்கின்றன. தாம் கைப்பற்றியுள்ள நாடுகளிலுள்ள எல்லாம், தாம் வென்றவையாகையால் தமக்கே உரியவை என்று கருதுகிருர்கள். அந்த வெற்றிகளில் தமக்கும் பங்கு உண்டு என்று ஒவ்வொரு ஜப்பானிய சிப்பாயும் கருதுகிருன். ஆகவே, தம் வசப்பட்ட நாடுகளிலுள்ளவர்களைத் தம் இஷ்டம் போல நடத்துகிருர்கள். வீடுகளுக்குள் பலாத்காரமாக நுழைந்து சொத்துக்களைச் சூறையாடி, பெண்களைத் தூக்கிக் கொண்டு போய் விடுகிருர்கள். இவை நாள்தோறும் நடைபெறும் சர்வ சாதாரணமான சம்பவங்கள்.

அபினியை ஊட்டுகிருர்கள்.

இவர்களுடைய மிருகச் செயல்களில் ஒரு முறையும் நோக்கமுமுண்டு. தம் கைவசப் பட்ட நாடுகளிலுள்ள மக்களின் ஒழுக்கத்தை எந்தெந்த வகைகளில் கெடுக்க வேண்டுமோ, அந்த வகைகளிலெல்லாம் கெடுக்கிருர்கள். எப்படியென்ருல், அவர்களைப் பொருளாதார அடிமைகளாக்கி விடுகிருர்கள். இதற்கு அபினியை ஊட்டி மதியைக் கெடுக்கின்றனர். அவர்களுடைய கலையையும் நாகரிகத்தையும் நாசஞ் செய்கிருர்கள்.

—பீஹார் மாகாண தேசீயப் பேர்முனை அமைப்பாளர் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தின் மொழி பெயர்ப்பு.

மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். அது போன்ற சென்னை ஆம்புலென்ஸ் காரின் முழு விலையும் ரூ. 3.275 மட்டுந் தான். இந்த ரூ. 3,275-ம் உங்கள் ஜில்லா கலெக்டரிடமாவது தாசில்தாரிடமாவது கொடுத்து "கவர்னர் யுத்த நிதியைச் சேர்ந்த ஆம்புலென்ஸ் நிதிக்கு" என்று குறிப்பிட்டு விடுங்கள். நீங்கள் எந்தப் பெயரை வைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அந்தப் பயர் கொண்டு அந்த ஆம்புலென்ஸ்கார் வழங்கப்படும். அதன் பெயர் அதன் மீது பொறிக்கப்பட்டிருக்கும். அந்த மோட்டாரில் எற்றிக் கொண்டு போகப்படும் நோயாளிகளும் காயப்பட்டவர்களும், தம்மை விரைவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு உதவியவர் இன்னார் தான் என்று உணர்ந்து நன்றி செலுத்துவார்கள். அந்த மோட்டாரின் படமொன்றும் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். அதிகப்படிப் பிரதிகள் தேவையிருந்தால், பிரதி ஒன்றிற்கு ரூ. 2 வீதம் விற்கப்படும்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

போர்க் கருவிகள் உற்பத்தி யுத்தம் ஆரம்பித்து பிரான்சும், டன்கர்கும், விழுந்தவுடன், போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதில் பிரிட்டன் உறுதியையும் ஊக்கத்தையும் காட்ட ஆரம்பித்தது. அதோடு பொது மக்களின் விருப்பத்தினாலும் ஒத்துழைப்பாலுமே இவ்வளவு பிரமாண்டமான காரியங்களை சாதிக்க முடிந்தது. மக்களை போர் வீரர்களாக சேர்ப்பதற்காக நேஷனல் சர்வீஸ் சட்டம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. இதைத் தவிற 1941 மார்ச் மாதத்தில் நிறைவேற்றப் பட்ட வேலைக்காக பதிவு செய்யும் சட்டம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. இதன்படி எந்த வேலையிலும் ஈடுபட்டில்லாத 42 முதல் 50 வயது வரையிலுள்ள ஆண்களும், 18 முதல் 50 வயது வரையிலுள்ள பெண்களும், போர் வேலையில் கட்டாயமாகச் சேர்க்கப்படுகின்றனர். இதன் பலனாக இப்போது 2 கோடியே 30 லட்ச மக்கள் போர் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெண்களின் தீரம்.—பிரிட்டனில் பெண்கள் போர் முயற்சியில் ஈடுபட்டிருப்பது மிகவும் பாராட்ட தக்கது. ஆண்கள் செய்த வேலைகளைப் பெண்கள் செய்கிறார்கள். ஆண்கள் போர் முனைக்கு செல்லுமாறு உதவி புரிகிறார்கள். இஞ்சினியரிங் தொழிற்சாலைகளில் 100-க்கு 35 பெண்கள். ரசாயனத் தொழிற்சாலைகளிலும் வெடி மருந்து உற்பத்திசாலைகளிலும் 100-க்கு 50 பேர் பெண்கள். விமான உற்பத்தித் தொழிலாளர்களில் 100-க்கு 40 பெண்கள். துப்பாக்கி, தோட்டா செய்யும் வேலைகளில் 100-க்கு 60 பெண்கள். ஆக சராசரி, போர்க் கருவி உற்பத்தி சாலைகளில் 100-க்கு 70 பெண்களே. அதோடு கப்பற் படை, கால் படை, விமானப் படையிலும் கணக்கற்ற பெண்கள் சேர்ந்து வேலை செய்கின்றனர். ஆகவே, வீட்டு வேலைக்கு ரத்னகிருக்கி ஏற்பட்டிருக்கிறது. பெரிய மாளிகைகளில் வசித்த பெண்கள், வீடு பெருக்குவதும், பாத்திரம் சுத்தம் செய்வதும், சமையல் செய்வதும் சர்வ சாதாரணமாகி விட்டது.

கானலிலும் வேனலிலும் பெண்கள்.—அலங்காரத்திலும், சினிமா முதலிய காட்சிகளிலே பொழுதையும், பொருளையும் செலவழித்த பெண்கள் தற்சமயம் காக்கி உடைதரித்து கானலிலும், வேனலிலும் உழைக்கின்றனர். இதை விட வேறே த்யாகம் எதைக் கூறமுடியும். யுத்த ஆரம்பத்தில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு யுத்தத்தைப் பற்றி கூறினால் எங்கே பயந்து விடுவார்களோ என்று யுத்தச் செய்திகளை அறியவிடாமல் மறைத்து வைத்திருந்தார்களாம். செய்தி நேரத்தில் ரேடியோக்களை நிறுத்திவிடுவார்களாம். இவைகளெல்லாம் எத்தனை நாளைக்கு? சில காலம் தான். 1940-லிருந்து பெண்களின் மனப்பான்மையே மாறி வீரத் தாய்மார்களாக விளங்குகிறார்கள்.

சிறு குழந்தைகளின் தீரம்.—யுத்த ஆரம்பத்தில் விமானத் தாக்குதலின் காரணமாக இந்தியாவிலுள்ள பெற்றோரிடம் அவரவர் குழந்தைகளைக் கப்பலேற்றி அனுப்பினார்கள். சப்பல் அந்தந்தத் துறைமுகங்களில் நின்றதும், அவர்களை அழைத்து செல்ல வந்திருந்த பெற்றோரை பார்த்ததும் குழந்தைகள், இது என்ன இங்கு ஒரு தாமாஷையும் காணோமே, பாம்ப் சத்தமோ, வெடி மருந்து சத்தமோ, விமான சத்தமோ, ஒன்றையும் காணோம். ஊர் நிசப்தமாயிருக்கிறது. ஐரோப்பாவில் எங்கு பார்த்தாலும் எப்போதும் பட்டாசு சத்தம், குண்டு சத்தம், வாணவேடிக்கை, வரிசை வரிசையாக விமானம் பார்க்கும் காக்ஷி எவ்வளவோ அழகாயிருக்கும். இங்கு ஒன்றும் நன்றாக இல்லை. எங்களை ஏன் இங்கு அனுப்பினார்கள் என்று சிறு குழந்தைகள் கேட்டனவாம்!

வீரரின் பெருமை.—வீரன் எதைச் செய்ய புகுந்தாலும் நன்கு ஆலோசித்துத் தான் அதைச் செய்யப் புகுவான். ஆரம்பித்த பிறகு அதினின்று பின்வாங்குவது என்பது வீரர்களுடைய இலக்கணத்தில் இல்லை. உதாரணமாக, ஜெனரல் விங்கேட்டின் சிறப்புக்களை எடுத்துக் கொள்வோம். பர்மாவை ஜப்பானியர் வசப்படுத்திக் கொண்டு இந்தியா மீது தனது நாட்டத்தை செலுத்திக் கொண்டிருக்கும் போது, ஜெனரல் விங்கேட் தன் படைகளைச் செலுத்திக் கொண்டு போய் பல இடங்களில் கடுமையாக போர் புரிந்தார். இவர் ஆற்றியுள்ள வீரச்செயல்கள் பல. பல இடங்களில் ஜப்பானியப் படைகள் இவர் தாக்குதலுக்கு ஆற்றமாட்டாமல் ஓட்டம் பிடித்தன. இவர் தன் விடா முயற்சியினாலும் பிடிவாதத் தன்மையாலும் பலவித கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு ஜப்பானியரோடு போராடினார். இந்தப் போராட்டத்தில் அவர் செய்த சாகசங்கள் பல. அவருடைய புகழொளி உலக மெங்கும் வீசத் தலைப்பட்டது. அவர் புகழ் மேலும் ஓங்கச் செய்யத்தக்கபடி, அவர் போர்முனையில் மாண்டார். அவர் எதிரிகள் கையில் சிக்கிமாளவில்லை என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. ஆனால் அவர் ஏறிச் சென்ற விமானத்திற்கு விபத்து ஏற்பட்டதன் பயனாக, அவர் உயிர் துறக்க நேர்ந்தது. இம்மாதிரி வீரர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். ஆதலினால் ஜெயம் கிரேட் பிரிட்டனுக்கே என்பது நிச்சயம்.

"பொறுத்தவர் பூமியாள்வார் மற்றவர் காடாள்வார்" என்பது இப்போதே எதிரி உணர்ந்து விட்டார். எதிரி வசமான நாடுகளை ஒன்றின் பின் ஒன்றாக நேச நாட்டினர் கைப்பற்றுவதே இதற்குப் **போதிய சான்று.**

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தினின்று சமீபத்தில் ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.

சும்மா தூங்குவார்களா?

எவ்வளவு காலம் தான் கண்ணும் பொத்தி விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பது? காலம் சென்று கொண்டே இருக்கிறதல்லவா? யுத்தம் எப்பொழுது முடியப் போகிறது என்று உலக மக்கள் எல்லாம் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? ஆகவே, சட் புட் என்று ஐரோப்பாவில் நாஸி எமனையும், கீழ்த் திசையில் ஜப்பானியப் பிசாசையும் அழித்து ஒழிக்க வேண்டு மல்லவா? இதை மனதில் கொண்டே சில தினங்களுக்கு முன் இத்தாலியில் பயங்கரமான போர் ஒன்றைத் துவக்கினார்கள் நேச தேசத்தார். இந்தியாவிலும், ஜப்பானியரைச் சரியான படி உதைத்தார்கள்.

கெஸல்ரிங்கிற்கு தெரியும்

இத்தாலியிலே, நேசப் படைகளின் முன்னேற்றத்தை காஸினோ என்ற நகருக்கு அருகே வெற்றிகரமாக நிறுத்தி விட்டார்கள் அல்லவா? இந்த வெற்றியை எண்ணி ஜெர்மானியர் கொம்மாளம் கொட்டிக் கொண்டிருந்தார்கள். ஆயினும், நேச தேசப் படைகளுக்கு மேலும் மேலும் வந்து குவியும் உதவியின் வேகத்தையும், நேசப் படைகளின் உயர்ந்த பலத்தையும் இத்தாலியில் உள்ள ஜெர்மன் சேனாதிபதி மார்ஷல் கெஸல்ரிங் உணராமலில்லை.

அன்ஸியோ புராணம்

இது ஒரு புற மிருக்க, ஜனவரி 22-ந் தேதி அன்ஸியோ என்ற கடற் கரையில் நேசப் படைகள் போயிறங்கின அல்லவா? அங்கிருந்து கொஞ்ச தூரம் முன்னேறிய பின், அப் படையும் நின்று விட்டது. குரங்குப் பிடியாக, தாங்கள் பிடித்த பிரதேசங்களை அவர்கள் விடவேயில்லை.

இந்தக் கடற் கரைப் படையும், பிரிட்டிஷ் ஐந்தாவது சேனையும் ஒன்று சேர விடக் கூடாது என்று மார்ஷல் கெஸல்ரிங் தன்னாலான முயற்சிகள் எல்லாம் செய்து பார்த்தார்.

ஆத்திரம் கொண்டார்கள்

ஆனால், நேச தேசப் படைத் தலைவர்கள் சும்மா இருக்கவில்லை. பார்த்தாயா, இவ்வளவு தூரம் இத்தாலியில் முன்னேறிய பிறகு, இந்தப் பயல்கள் நம்மை நிறுத்தி விட்டார்களே, இவர்களை லேசிலே விடக் கூடாது என்று கொதித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

எதிரி இப்பொழுதும் எண்ணி ஆச்சரியப் படும் படியான முறையில், நேச தேசப் படைத் தலைவர்கள், எட்டாவது சேனையும், ஐந்தாவது சேனையும் ஒன்று கூடித் தாக்கத் திட்டம் போட்டு, தங்கள் திட்டப் படியே எல்லாக் காரியங்களையும் நடத்தி விட்டார்கள். இவ்வாறு இப் படைகள் சேருமென்று கெஸல்ரிங் எதிர் பாரா விட்டாலும், நேச தேசத்தார் தங்களைக் கூடிய சீக்கிரமே தாக்கப் போகிறார்கள் என்பதை மட்டும் அவர் நன்றாக உணர்ந்திருந்தார். அதனைத் தமது படைகளுக்கும் தெரிவித்திருந்தார்.

எதிர் பாராதது!

ஆனால், அவர் எதிர் பார்த்த நாளுக்கு பத்து நாட்களுக்கு முன்னதாகவே. நேச தேசப் படைகள் அதி பயங்கரமாக ஜெர்மானியர் மீது விழுந்து தாக்கத் தொடங்கி விட்டன. ஜெர்மானியர் திகைத்து விட்டார்கள். நேசப் படைகள் பிரமாதமான பலம் கொண்டு தாக்கவே, கெஸல்ரிங் பல காலம் பாடு பட்டுக் கட்டிய கஸ்டப் அரண், ஹிட்லர் அரண் எல்லாம் தவிடு பொடியாகி விட்டன. நேசப் படைகள் அந்த அரண்களை யெல்லாம் லக்ஷ்யம் செய்யவே இல்லை. இதனால் எதிர்ப்பே இல்லை என்று அர்த்தமில்லை. கடுமையான எதிர்ப்புத் தான். ஆனால் அதெல்லாம், திட சித்தத்துடன் முன்னேறிய நேசப் படைகளை நிறுத்த முடிய வில்லை.

வெட்கம்! வெட்கம்!

கெஸல்ரிங்கிற்கே வெட்கமாகப் போய் விட்டாப் போலிருக்கிறது. ஹிட்லருடைய பெயரை ஒரு அரணுக்கு வைப்பதென்ன, அது விழுவதென்ன! ஹிட்லரது பெயருக்கே இது கேவலமல்லவா? இந்த அரணை யாரும் எளிதில் தகர்க்க முடியா தென்ற நம்பிக்கையில் அவர் ஹிட்லரிடம் இந்த அரணைப் பற்றி பிரமாதமாக சொல்லி, ஹிட்லரின் சம்மதியைப் பெற்று, அப் பெயரை இட்டிருக்க வேண்டும். இப்பொழுது இந்த அரணிற்குள் நேசப் படைகள் சுலபமாகப் புகுந்து விடவே, கெஸல்ரிங் சொன்னாராம் 'இந்த லைனுக்கு ஹிட்லர் லைன் என்று பெயரில்லை. அது இன்னும் வடக்கே இருக்கிறது என்று. நேசப் படைகளின் முன்னேற்றத்திற்கு முன் இந்தப் பெயரும் பின் வாங்கிக் கொண்டேயிருக்கும் போலிருக்கிறது.

அன்ஸியோ வீரர்கள் எழுச்சி

ஐந்தாவது, எட்டாவது சேனைகள் அடைந்து வரும் அபாரமான வெற்றி, அன்ஸியோ கடற்கரையில் உள்ள நேசப் படைகளுக்குத் தெரியாமலிருக்குமா என்ன? அங்குள்ளவர்களுக்கும் உத்சாகம் பிறந்துவிட்டது. அவர்களும் போனவாரம் முன்னேறத் தொடங்கிவிட்டார்கள். வெடி விமானங்களும் சண்டை விமானங்களும் ஈட்டி முனை போல் முன்னால் சென்று, ஜெர்மன் முன்னணியைச் சீர்குலைத்தன. அதைத் தொடர்ந்து நேசப் படைகள் முன்னேறின.

திடீரென்று ஒரு நாள் பிரிட்டிஷ் ஐந்தாவது சேனையும், அன்ஸியோ கடற்கரைப் படைகளும் ஒன்று சேர்ந்துவிட்டன. கெஸல்ரிங் இவ்வளவு காலம் விரும்பாமலிருந்தது இப்பொழுது நடந்து விட்டது. என்ன செய்வது? நியாயமாக நடக்க வேண்டியது தானே இது?

தலை தப்பினால் போதுமோ?

நேசதேசப் படைகள் தொட்டிபோல் வளைந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இப்படியே சென்று, தொட்டியின் வாயை மூடிவிட அவை திட்டம்போட்டிருக்கிறாப்போலிருக்கிறது. அவ்வாறு ஆகிவிட்டால், ருஷ்யாவிலே ஜெர்மானியர் பல இடங்களில் சிக்கி, ஏக நஷ்டப்பட்டார்களே, அம்மாதிரி இங்கும் ஆகக் கூடும். பல ஜொமன் படைகளும், ஆயுதங்களும் இடுக்கிலே சிக்கிக் கொள்ளும். இந்தப் பயம் கெஸல்ரிங்கைப் பிடித்திருக்கிறது. ஆகவே நேசப் படைகள் அதிபலமாகத் தாக்குமிடங்களில், கொஞ்சம் விட்டுக் கொடுத்துவிட்டு, சௌகரியமான இடத்திற்குப்பின் வாங்க உத்திரவு கொடுத்துவிட்டாராம் அவர். தலை தப்பினால் போதுமென்றிருக்கிறாப் போலிருக்கிறது.

சரித்திரப் பிரசித்திபெற்ற அடி

இத்தாலியிலே இப்பொழுது ஜெர்மானியருக்குக் கொடுக்கப்படுவது போன்ற அடி, சரித்திரத்திலேயே யாருக்கும் எக்காலத்திலும் கொடுக்கப்பட்டதில்லை என்கிறார் ஒருவர். வரவர சண்டையின் மும்முரம் வலுத்துக் கொண்டே யிருக்கிறது. இன்னொருபுறம் நேசப் படைகளுக்கும் ரோமாபுரிக்கும் இடையிலிருந்த தூரம் 16 மைல்களாகி விட்டன.

ரோமாபுரி நெருங்குகிறது

ரோமாபுரியை அடையுமுன் இன்னும் சில பலமான தடங்கல்க ளிருக்கின்றன. ரோமாபுரிக்கு வெளியிலேயும் உக்ரமான போர் நடக்கக்கூடும். ரோமாபுரியைப் பாழாக்காது காப்பற்ற வேண்டு மென்று தான் நேசதேசத் தலைவர்கள் ஆசைப் படுகிறார்கள். ஆனால், இதைத் தங்களுக்கு அநுகூலமாகக் கொண்டு, நாஸிகள் ரோமாபுரியை ராணுவ முக்கியம் வாய்ந்த இடமாக ஆக்கிக் கொண்டால் என்ன செய்வது? வெற்றி பெற எதுவும் செய்யச் சித்தமாக இருக்க வேண்டாமா? இத்தாலியப்போர் முனைகளில் கிடைக்கும் வெற்றிகள், மேற்கே இரண்டாவது போர் முனை ஆரம்பமாகும் தேதியைத் துரிதப்படுத்தக் கூடும்.

அவசர ஏற்பாடுகள்

ஹிட்லர் அவசர அவசரமாக கிழக்குப் போர் முனையில் ஒரு பெரிய அரணை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறாராம் செஞ்சேனைகளின் தாக்குதல்களைச் சமாளிக்க. ஆனால், பானை செய்பவருக்குப் பல நாள் வேலை, தடிகாரருக்கு ஒரு நாள் வேலை என்பதுபோல், ருஷ்ய பீரங்கிகளும், விமானங்களும், ஜெர்மானியர் பல நாட்கள் பாடுபட்டு எழுப்பும் பாதுகாப்பு நிலையங்களை ஒரே நாளில் தூளாக்கி வருகிறார்கள். ருஷ்ய விமானங்கள் நாஸிப் போக்குவரத்து சாதனங்களைப் பாழாக்கி வருகின்றனர்.

கூட்டமும் பீதியும்

ஹிட்லர் தமது சகாக்களைக் கூப்பிட்டுப் பேசியிருக்கிறார். என்ன பேசியிருப்பார்? இப்பொழுது நாடு பிடிக்கும் பேச்சு எதுவும் இருந்திருக்க முடியாது. தாமெல்லாம் எவ்வாறு தப்பிப் பிழைப்பது? நேசதேசத்தார் வெற்றி பெற்றால் தங்களை எல்லாம் சும்மாவிடமாட்டார்களே?

ஆகவே, அவர்களது படையெடுப்பை எவ்வாறு சமாளிப்பது? நாளுக்கு நாள் சீமையிலிருந்து வரும் விமானப் படையெடுப்புகளின் கடுமை அதிகரித்து வருகிறதே! இதற்கென்ன செய்வது? இப்பொழுது எந்தெந்தப் படைகள் எங்கெங்கிருக்கின்றன? திடீரென்று மேற்கே நேசதேசத்தார் படையெடுத்தால், அதிகப்படி ஆட்களுக்கு எங்கே போவது? இத்தாலியிலிருந்து நாஸிப் படைகள் வெளியேற நேர்ந்தால், அவர்களைத் தொடர்ந்து வரும் நேசதேசப் படைகளைத் தடுத்து நிறுத்த இத்தாலியின் வடக்கெல்லையருகே, ஜினோவா பிரதேசத்திலே அரண் கட்டும் வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமே!—இவற்றைப் பற்றித்தான் அவர்கள் பேசியிருக்கவேண்டும். ஒருவர் முகத்திலாவது மலர்ச்சி இருந்திராது. ஒவ்வொருவரும் கண்களைக் கொட்டிக்கொண்டு, பெண்டாட்டியைப் பறிகொடுத்தவர்கள் போலே உட்கார்ந்திருந்திருப்பார்கள்.

பல்கேரியா நாஸிகள் வசம்

துருக்கிக்கு நேசதேசத்தார் இரவல் குத்தகைத் திட்டப்படி சாமான்கள் அனுப்புவதை நிறுத்தி விட்டார்கள். இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் இருக்க, எவ்வளவு ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டுமோ, அவ்வளவையும் துருக்கி செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, நேசதேசத்தார் துருக்கியின் உதவியை எதிர்பார்த்துப் பயனில்லை என்று, அதை அதன் போக்கில் போக விட்டுவிட்டார்கள். இப்பொழுது ருஷ்யர்கள் ருமேனியா மீது பாயத் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்பது ஹிட்லருக்குத் தெரியும். ஆகவே, பல்கேரியா முழுவதையும் அவர் ஆக்ரமித்துக் கொள்ள உத்திரவிட்டுவிட்டார். சில இடங்களில், பல்கேரியரின் எதிர்ப்பு இருந்ததாம். ஆயினும், நாஸிப் படைகள் பல்கேரியாவை தம் வசப்படுத்திக் கொண்டு விட்டனவாம். தங்களுடைய சக்தி நாளுக்கு நாள் குறைந்து வருவதையும், தங்களோடு சேர்ந்துள்ள நாடுகளை தங்களிடமிருந்து பிரிக்க, நேசதேசத்தார் விடாது உபதேசங்கள் செய்து வருவதையும், ஆபத்துவரும் பொழுது அந்தந்தச் சிறு நாட்டினர் பேசாது இருந்துவிட்டால், ஜெர்மனியை ஆபத்து நெருங்கிவிடுமே என்பதையும் மனதில் கொண்டே, நாஸிகள் இவ்விதமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். உள்ளூக்குள்ளே அவர்களுக்கு உதைப்புத் தான்.

ஸ்வீடனின் கவலை

டென்மார்க் தேசக் கடற்கரைகளிலே ஜெர்மானியர் படையெடுப்புப் படகுகளை ஏராளமாகச் சேர்த்து வைத்திருக்கிறார்களாம். ஒரு வேளை ஸ்வீடனைத் தாக்க ஹிட்லர் எண்ணுகிறாரோ என்னமோவென்று, அந்நாட்டிலே கவலை ஏற்பட்டிருக்கிறதாம். நார்வேயிலே நேசதேசப் படைகள் வந்திறங்கினாலும்சரி, வடகடல் வழியாக பிரமாண்டமான நேசதேசக் கப்பற்படைகள் வந்தாலும் சரி, ஸ்வீடன் குறுக்கே இருப்பது ஒரு சங்கடமாக இருக்குமோ என்று ஹிட்லர் நினைக்கிறாரோ என்னமோ? நார்வேயை நேசதேசத்தார் ஜெயித்து விட்டால், பிறகு அவர்கள் பக்கம் ஸ்வீடன் சேர்ந்துகொண்டால், ஜெர்மனுக்குப் பெரிய தலைவலி ஆகிவிடுமே என்ற பீதியும் அவருக்கிருக்கலாம். அதற்காக அவர் என்ன திட்டங்கள் போட்டிருக்கிறாரோ தெரியவில்லை. ஆனால் ஒன்று. யுத்த ஆரம்பத்தில் முன்னேறிய ஜோருடனே, இப்பொழுது ஜெர்மன் படைகள் எங்கும் போகமுடியாது. அவ்வாறு அவை போனால், வழிநெடுக நேசதேச விமானப் படையெடுப்பு பயம் அவற்றிற்கு இருந்தே ஆகவேண்டும்.

பயப்படுவது யார்?

யுத்த ஆரம்பத்தில் எல்லாம், நாஸிகளின் பயங்கர ஆயுதங்களைப்பற்றி ஒவ்வொருவரும் ரொம்ப பயந்து கொண்டிருந்தார்கள். நாஸிகள் விஷவாயு எல்லாம் தயாரித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் இன்னும் என்னென்னவோ ரகசியமாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்துக்கொண்டிருந்தன. இப்பொழுது எப்படி யிருக்கிறது பேச்சு? நேசதேசத்தார் என்னென்ன நூதன ஆயுதங்களைத் தயாரித்திருக்கிறார்கள்; இரண்டாவது போர் முனை ஆரம்பமானதும் அவற்றில் என்னென்ன உபயோகிக்கப் படும் என்றே நாஸிகள் பீதியோடு பேசிக் கொண்டிருப்பார்கள். நாஸிகள், வேறு வழியின்றி, எக்கச்சக்கமாகச் சிக்கிக்கொள்ளும் சமயத்திலே, விஷவாயுவைப் பிரயோகிக்கக்கூடும். ஆனால், அதைச் சமாளிக்கவும், பதிலுக்குப் பதில் அதி பயங்கரமான கடுகு விஷ வாயுக்களைத் தெளிக்கும் வெடிகுண்டுகளை ஏராளமாகச் சொரியவும் அமெரிக்கர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவசியமான சமயத்திலே, பல்லாயிரக் கணக்கான வீரர்கள், தாங்கள் இத்தனை காலம் விஷவாயுப் பரீட்சைச் சண்டைகளில் பெற்ற அநுபவத்தோடு, ஐரோப்பாவில் போயிறங்கச் சித்தமாக சீமையிலே காத்திருக்கிறார்கள். இரண்டாவது போர் முனை ஆரம்பமானால் ஜெர்மானியரை எங்கும் பிரமிக்க வைக்க முடியாது என்பது வாஸ்தவம். எந்த இடத்திலும் படைகள் வந்திறங்கக் கூடும் என்று, அவர்கள் எல்லா இடங்களிலும் தங்கள் வீரர்களையும், விமானங்களையும், ஆயுதங்களையும் வைத்திருக்கிறார்கள். ஆனால், நேசதேசப் படைப் பலம் அற்ப சொற்பமாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். பாய்ந்து விட்டால் முன் வைத்த காலைப் பின் வைப்பதென்பது கிடையாது.

சீமை மீது ஆத்திரங்கொண்ட நாஸிகள்

ஜெர்மன் விமானிகள் அவ்வப்பொழுது ஆத்திரத்தோடு சீமை மீது தோன்றி, சில குண்டுகளை வீசுவதும் ஓடுவதுமாக இருக்கிறார்கள். அதனால் நஷ்டம் ஏற்படத்தான் ஏற்படுகிறது. ஆனால் நேசதேச விமானிகளால் ஜெர்மனுக்கு ஏற்படும், நஷ்டத்திற்கும், ஜெர்மன் விமானிகளால் சீமைக்கு ஏற்படும் நஷ்டத்திற்கும் சம்பந்தமே இல்லை. முன்னது பேரிடி என்றால், பின்னது கொசுக்கடி போல் தானாகும்.

கீழ்த்திசையிலே!

மேற்றிசையில் யுத்த நிலைமை இப்படியிருக்க, கீழ்த்திசையில் என்ன நடக்கிறது தெரியுமா? ஜப்பானியர், ஆடி வருவதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பே ஆடி கழிந்து விட்டது என்று சொல்லுவது போல், பல நாட்களுக்கு முன்பே கொஹிமாவையும், இம்பாலையும் பிடித்து விட்டதாகப் பறைசாற்றத் தொடங்கி விட்டார்கள். ஆனால், அவர்கள் கைகளில் முழு கொஹிமாவோ, இம்பாலோ எந்நாளும் சிக்கவே இல்லை. இப்பொழுது அவர்கள் கொஹிமாவை விட்டுத் துரத்தப்பட்டு விட்டார்கள். கொஹிமாவிற்குத் தெற்கே ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டு, லேசிலே விடமாட்டேன் என்கிறார்கள்.

இம்பாலுக்கு மேற்கே பிஷன்பூர் என்ற இடத்திலேயும் அவர்களுக்கு உதை. ஆனால், இந்தப் பிரதேசத்திலேயும், இம்பால் பிரதேசத்திலேயும் ஜப்பானியர் அதி பயங்கரமாகப் போராடுகிறார்கள். இம்பாலை எப்படியும் பிடித்து விட வேண்டுமென்று அவர்கள் துடிக்கிறார்கள் போலிருக்கிறது. ஆனால், மதராஸிகளும், வீர கூர்க்கர்களும், மற்றும் பல இந்தியப் படைகளும், ஜப்பானியரது எண்ணங்களில் மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மழையும் ஆரம்பமாகி விட்டது. ஆனால் போர் நிற்கு மென்று தோன்றவில்லை.

வட பர்மாவிலே வெற்றி

வட பர்மாவிலே ஸ்டில்வெல் துரையின் படைகள் வெற்றிப் பாதையிலேயே இருக்கிறார்கள். அவர்களை நினைத்தாலும், ஜப்பானியருக்குக் கிலியாகவே இருக்கும். பர்மா, தென் மேற்கு பஸிபிக் பிரதேசங்களில் எல்லாம் அமெரிக்க விமானிகள் ஆகாச வாண பீரங்கிகளை உபயோகித்து வருகிறார்களாம்.

மக் ஆர்தரின் திட்டங்கள்

தென் மேற்கு பஸிபிக்கிலே, ஜெனரல் மக் ஆர்தர் தீர்மானமாக் தமது படைகளுடன் முன்னேறி வருகிறார். நியூகினியா போரை முடித்துக் கொண்டு விட்டாரவர். இனி பிலிப்பைன்ஸைத் தாக்க விரும்புகிறார் அவர். பிலிப்பைன்ஸ் என்றால் அவருக்கு உயிர். அதை மீட்பதில் அவருக்கு விசேஷ சிரத்தை உண்டு. யுத்த ஆரம்பத்தில், பிலிப்பைன்ஸிலே போர் நடந்த போது, ரொம்ப நெருக்கடியான சந்தர்ப்பம் வரும் வரை, மக் ஆர்தர் அத்தீவை விட்டுக் கிளம்ப வில்லையே! கூடிய சீக்கிரமே பிலிப்பைன்ஸ் போர் ஆரம்பமாகும். அது முடிந்த பிறகு, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் மீது அவர் கவனம் செலுத்தக் கூடும். ஜப்பானியரையும், நாஸிகளையும் ஒழிக்கும் வரை, யாரும் சும்மா யிருக்கப் போவதில்லை. அது மட்டும் நிச்சயம்.

சென்னையில் மட்டும் 3 கோடிக்கும் அதிகமா ?



யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

மே 24.—அந்நிய நாடுகளைக் குறித்த விவாதத்தை காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் ஆரம்பித்தார்.

மே 26.—ஜெனரல் ஐசினோவருக்கு மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் பேட்டி கொடுத்தார்.

மே 28.—ஜப்பானிய தூதராக ஜெர்மனியிலிருக்கும் ஜெனரல் ஓஷிமோவுக்கு ஹிட்லர் நேற்று பேட்டியளித்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

மே 26.—ஜூலை மாதம் 1-ம் தேதி உலக நாணய மகாநாடு நடைபெறுமென்று அமெரிக்க அரசாங்க சபையில் அறிவிக்கப்பட்டது.

மே 30.—யுத்தத்திற்குப் பிறகு சமாதானத்தை நிலை நாட்டுவது பற்றி பிரிட்டிஷ், சோவியத், சீன நாடுகளுடன் தானும் சேருவதாக அமெரிக்க மந்திரி கார்டல் ஹல் வெளியிட்ட பிரகடனத்தையொட்டி, அந்நாடுகளின் ஸ்தானீகர்களுடன் அவர் கலந்து பேசினார்.

பிரிட்டிஷ் ஸ்தானீகராக அமெரிக்காவிலிருக்கும் மிஸ்டர் ஜான் ஜி. வினண்ட் இங்கிலாந்திற்குத் திரும்பினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

மே 24.—கொஹிமாவுக்குத் தெற்கேயும் தென் மேற்கேயும் நேசப் படைகள் முன்னேறின ; பிஷன்பூர் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தைக் கைப்பற்றின.

மே 27.—மியிட்கியானாவை நோக்கி நேசப் படைகள் 1½ மைல் தூரம் முன்னேறின.

மே 29.—மியிட்கியானாவின் தென் கோடியில் சீன அமெரிக்கப் படைகள் புகுந்து, கமாய்ங்குக்கு வடக்கே யுள்ள ஷாரா என்னும் கிராமத்தைக் கைப் பற்றினர்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

மே 24.—டெர்ராசினா, பிகோ, லொனேலா, மாண்டி ஆல்டோ என்னுமிடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மே 25.—மாண்டிகார்வோ, லாவில்லா, அக்வினோ ஆகிய ஊர்களை நேசப் படைகள் கைப்பற்றிக கொண்டன.

மே 26.—ரோமாபுரிக்கு 21 மைல் தூரத்தில் நேசப் படைகள் இருக்கின்றன. இஸ்டர்னா, லிட்டோரீயோ, ராக்கெருசக்கா, மெண்ட்கெய்ரோ, கோரி, சான் ஜியோவன்னி, வல்லாகோர்ஸா, கொல்லாக்ரெனேட் ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மே 27.—செஸ்ஸி, மாண்டி அரெஸ்டினோ ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மே 28.—கபரானோ, ஆர்டினோ, பெல் மாண்டி, வில்லா சென்ஸ்டிபானோ, ரார்மா ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

மே 29.—ரோமாபுரிக்கு 16½ மைல் தூரத்திற்குள் 5-ம் படை யிருக்கிறது. செர்மோனிடா, பாசியான் என்னும் பட்டணங்களை விட்டு ஜெர்மன் படைகள் விரட்டப்பட்டன.

மே 30.—பிரிட்டிஷ் படைகள் ஆர்ஸ் என்னுமிடத்தைக் கைப்பற்றின. 8-ம் படை அட்டினாவைக் கைப்பற்றியது. நேசப் படைகள் வெலெட்ரியின் வெளிப் பகுதிகளில் நுழைந்துவிட்டன.

தூரக் கிழக்கு நாடுகள்.

மே 24.—சின்பிங், சுமடீன், இவ்பிங், ஹிசியும்ஷான் ஆகிய இடங்களை சீனப் படைகள் கைப்பற்றின.

மே 26.—நியூகினியைச் சேர்ந்த சார்மிமப்பின் விரிகுடாவை யடுத்துள்ள விமான நிலையத்தை நேசப் படைகள் அடைந்து விட்டார்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.